# பேராசிரியர் அழகையா துரைராஜா

## அவர்களின் 21ஆம் ஆண்டு

# நினைவு வைபவம் – 2015

**காலம்** : 11.06.2015 (வியாழக்கிழமை)
**நேரம்** : மு.ப 10.00 மணி
**இடம்** : யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவு மண்டபம்.

**தலைவர்** : **பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா**

நினைவுப் பேருரை : **கலாநிதி செல்வரத்தினம் சந்திரசேகரம்**
[B.A(Hons),M.A,Ph.D]
**(முதுநிலை விரிவுரையாளர், பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)**

## நிகழ்ச்சி நிரல்

01. மங்கல விளக்கேற்றல்.
02. இறைவணக்கம்.
03. பேராசிரியரின் நிழற்படத்திற்கு மலர்மாலை அணிதல்.
04. தலைவர் உரை.
05. அதிபர் உரை.
06. பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவுப் பரிசில் வழங்கல்
    அ. 2014 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் கணிதத்துறையில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவன்
    செல்வன் பாக்கியராஜா டாருகீசன் (யாழ்.இந்துக்கல்லூரி)
    (அவுஸ்திரேலியாவிலுள்ள பொறியியலாளர், திரு பாலசிங்கம் மாணிக்கவாசகர் அவர்களின் நிதியத்தில் இருந்து வழங்கப்படுகின்றது)
    ஆ. 2014 ம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் கணிதத்துறையில் பாடசாலை மட்டத்தில் முதலாம் இடம் பெற்ற மாணவன்
    செல்வன் ஜெகநாதன் ராஜேந்தர்
    (அவுஸ்திரேலியாவிலுள்ள பொறியியலாளர், திரு முருகுப்பிள்ளை ஞானானந்தன் அவர்களின் நிதியத்திலிருந்து வழங்கப்படுகின்றது)
07. நினைவுப் பேருரை (ஈழுத்தமிழர்களின் சேமிப்பின் தங்க நகைகளின் வகிபாகம்)
08. நன்றியுரை.
09. கல்லூரிக் கீதம்.

**பழையமாணவர் சங்கம்,**
**யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

SMA Printers Uduppiddy.

## பேராசிரியர் அழகையா துரைராஜா நினைவுப் பரிசில் பெறும் மாணவன் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடம்.



பெயர் **செல்வன் பாக்கியராஜா டாருகீசன்**

**ஆரம்பக்கல்வி** யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

(5ம் ஆண்டு புலமைப்பரிசில் 2005ம் ஆண்டு 149 புள்ளிகள்)

**இடைநிலைக்கல்வி** யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

க.பொ.த (சா/த) 2011ம் ஆண்டு 8A , B

உயர்கல்வி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

க.பொ.த(உ/த) ஆங்கிலமொழி மூலம்

2014ம் ஆண்டு 3A தேசிய நிலை 01

Z புள்ளி - 3.0717

சொந்த இடம் மீசாலை

தற்காலிக வதிவிடம்

நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தந்தை பெயர் சு.பாக்கியராஜா

தொழில் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்,

தாய் பெயர் பா.லோகஜனனி

சகோதரி பா.தாட்சாயினி (2016 உயிரியல்)

## துறைசார் நூல்கள்


[1] SelvarathinamSanthirasegaram (2012)Sociopolitical causes for economic growth and inflation in Sri Lanka, Social and economical factors VS economic factors for economic growth (ISBN 978-3-8484-2087-2) LAMBERT Academic Publishing GmbH & Co. KG, Germany, Printed in USA and UK

[2] செல்வரத்தினம் சந்திரசேகரம் (2009) சீனா-இந்தியா பொருளாதார அபிவிருத்தி - ஓர் ஒப்பீட்டு ஆய்வு, குமரன் பதிப்பு இல்லம், கொழும்பு, 303 பக்கக்கங்கள் (ISBN978-955-659-202-3, புரட்டாதி, 2009,

[3] செல்வரத்தினம் சந்திரசேகரம் (2013) பொருளாதார அபிவிருத்தி: சிங்கப்பூரும் இலங்கையும், அரசியல் பொருளாதார ஒப்பியல் நோக்கு, 200 பக்கக்கங்கள், ISBN: 978-955-685022-2

[4] செல்வரத்தினம் சந்திரசேகரம் (2014)பட்டதாரிகளுக்கான முயற்சியாண்மை, கங்கை அச்சகத்தால் அச்சிடப்பட்டு அபி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. 149 பக்கக்கங்கள், ISBN: 978-955- 44890 - 4 -2

[5] செல்வரத்தினம் சந்திரசேகரம் (2013) நாணயப் பொருளியல் குடாநாட்டுப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. 200 பக்கக்கங்கள், ISBN: 978-955- 44890 -2-8

[6] செல்வரத்தினம் சந்திரசேகரம் (2013) பொருளாதார சிந்தனை வரலாறு, அபி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. 222 பக்கக்கங்கள், ISBN: 978-955- 44890 -0-4

[7] செல்வரத்தினம் சந்திரசேகரம் (2011) போரினப் பொருளியலுக்கு ஓர் அறிமுகம். அபி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. 146 பக்கக்கங்கள், ISBN: 978-955- 44890 -5-9


## இலக்கிய நூல்கள்


1. செல்வரத்தினம் சந்திரசேகரம் (2014) வடக்கின் வசந்தங்கள், சிறுகதை தொகுப்பு, 85 பக்கங்கள், அபி பதிப்பகம். மானிப்பாய், யாழ்ப்பாணம்.
2. செல்வரத்தினம் சந்திரசேகரம் (2014) தமிழ் இலக்கியங்களில் பெண்களின் குணங்கள், 116 பக்கங்கள், அபி பதிப்பகம். மானிப்பாய், யாழ்ப்பாணம்.

# யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

பேராசிரியர் அழகையா. துரைராஜா

நினைவுப் பேருரை

11.06.2015

விடயம்:

## ஈழத் தமிழர்களின் சேமிப்பின் தங்க நகைகளின் வகிபாகம்

## (Role of Gold Jewellery in Tamils' Saving in Eelam)

**நினைவுப் பேருரை ஆற்றுபவர்**


கலாநிதி செல்வரத்தினம் சந்திரசேகரம்

[B.A (Hons), MA, Ph.D]

முதுநிலை விரிவுரையாளர்

பொருளியல்த் துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஈழத் தமிழர்களின் சேமிப்பில் தங்க நகைகளின் வகிபாகம்
# (Role of Gold Jewelaries in Tamil's Saving in Eelam)

அன்புக்குரிய பாடசாலை சமூகமே!

இந்தக் கல்லூரியின் மதிப்புக்குரிய அதிபர் அவர்களே, விருந்தினர்களாக வந்துள்ள பெருந்தகைகளே, எதிர்காலத்தின் தூண்களான இன்றைய மாணவர்களைச் செதுக்கிடும் பணிபுரியும் ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே, கல்லூரியின் பழைய மாணவர்களே, அபிவிருத்திச் சபையினரே, பெற்றோர்களே, நலன் விரும்பிகளே, பேராசிரியர் அழகையா. துரைராஜா அவர்களின் உறவுகளே அனைவருக்கும் எனது பணிவான வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென் ஆசிய நாடுகளில், குறிப்பாக இலங்கையின் கல்வி மேம்பாட்டின் வரலாற்றில் அமெரிக்க மிஷனரியினரின் பங்கு குறிப்பிடக்கூடியது. இவ்வகையில் யாழ்ப்பாணத்தின் கல்வி மரபிலும் அவர்களின் பங்களிப்பு போற்றுதற்குரியது. யாழ்ப்பாணத்தின் அரசியல் , பொருளாதார மற்றும் சமூக அசைவியக்கத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இம் மிஷனரிப் பாடசாலைகளினால் ஏற்படுத்தப்பட்டன. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொடக்கம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வரை இதற்கான சான்றுகள் பல உள்ளன.

யாழ்மாவட்டத்தில் இக்கல்லூரி அமைந்துள்ள உடுப்பிட்டிக்கும் பெருமை உள்ளது. உலகத்திலே கணிதத்தில் தலை சிறந்து விளங்குபவர்கள் ஆசியா கண்டத்துக்குரியவர்கள். அதில் இலங்கைக்கு பிரதான இடம் இருக்கிறது இலங்கையிலும் யாழ்ப்பாணத்துக்கு முதன்மையான இடம் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் வடமராட்சிக்கு அதிக பங்கு உண்டு. வடமராட்சியில் உடுப்பிட்டிக்கு மிகச் சிறந்த இடம் இருக்கிறது. இம்

மண் பல கணிதமேதைகளை உருவாக்கியுள்ளது. இச்சிறப்புகளுக்கு காரணமான ஒரு மாமனிதனே பேராசிரியர். அழகையா. துரைராஜா அவர்கள். பேராசிரியர் அவர்களின் நினைவுப் பேருரையினை ஆற்றக்கிடைத்த இந்தச் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்த ஒரு பேறு ஆகும்.

ஒரு பாடசாலையில் வருடா வருடம் பல மாணவர்கள் கல்வி கற்க வருகின்றார்கள். பல மாணவர்கள் வெளியேறிச் செல்கின்றார்கள். இவர்களில் ஒருசிலரே வரலாற்றில் தங்கள் பெயர்களை பொறிக்கிறார்கள். வரலாற்றில் பெயர் பொறிக்கப்பட்ட மாணவர்களால் அவர்கள் படித்த பாடசாலையும் அவர்களுக்கு கல்வி கற்பித்த ஆசிரியர்களும் சிறப்பு பெறுகிறார்கள். ஒவ்வொரு மாணவனும் தான் அந்தப் பாடசாலையில், பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுள்ளேன் என இந் நிறுவனங்களின் பெயரைக் கூறி புகழைத் தேடிக்கொள்ள, ஒரு சில மாணவர்கள் அவர்களுக்கு கல்வி கற்ப்பித்ததால் அந்த கல்வி நிறுவனங்களுக்கு அவர்கள் புகழைத் தேடிக் கொடுக்கின்றனர். மாணவர்களால் பாடசாலை சிறப்படைகின்றது. பேராசிரியர். அழகையா துரைராஜா அவர்கள் இவ்வகையை சார்ந்த மாமனிதர் ஆவார்.

இம் மாமனிதனால் இப் பிரதேசத்தின் இரண்டு பாடசாலைகள் பெருமைப்படுகின்றன. இவர் தனது வரலாற்றுச் சிறப்பான சாதனைகளை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியிலும் , காட்லிக் கல்லூரியிலும் பதித்திருந்தார். இவருடைய பெருமையில் இரண்டாவதை விட முதலாவது பாடசாலைக்கு அதிக பங்கு உண்டு. அத்திவாரம் உறுதியானதாயின் கட்டிடம் தளம்பலடையாது. அந்த அத்திவாரத்தை இட்டது இக் கல்லூரி ஆகும். இவர் சர்வதேச புலமையாளராகவும் உள்ளூர் பணியாளராகவும் விளங்கியிருந்தார். பண்பாட்டு மரபிலே ஆழமாகக் கால்பதித்து, தான் வாழ்ந்த சமுதாய அபிவிருத்திக்காக பணிகளை ஆற்றிக் கொண்டு புலமைச்சிறப்புக்களின் உன்னதங்களையும் கண்டவர் பேராசிரியர் அவர்கள். இதற்கான அடித்தளத்தினை உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன்

கல்லூரி இட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவருடைய பெயரில் கணிதத்தில் பொதுவிதிகள் இருப்பதில் இருந்து இவருடைய சிறப்பை அறிய முடிகின்றது.

பேராசிரியர் துரைராஜா அவர்கள் 1934 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இமையாணன் என்ற கிராமத்தில் பிறந்தார். தனது பாடசாலைக் காலத்தின் பின்னர் 1953 ஆம் ஆண்டில் இலங்கை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்குத் தெரிவாகி 1957 ஆம் ஆண்டில் முதலாம் வகுப்பில் சித்திபெய்தியிருந்தார். பின்னர் கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் புகழ்பெற்ற பேராசிரியர் "கே.எச். றொஸ்கோவின்" வழிகாட்டலில் 1961 ஆம் ஆண்டில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். 1962 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் குடிசார் பொறியியல்துறை விரிவுரையாளரான இவர் பின்னர் அதன் பேராதனை வளாகத்தில் 1962 ஆம் ஆண்டில் பேராசிரியரானார்.

புலமைச் சிறப்பினால் உள்ளூரில் மட்டுமன்றி உலக அரங்கிலும் நன்மதிப்புப் பெற்றிருந்தார். மண்பொறிமுறை தொடர்பான 'துரையின் கோட்பாட்டினை' உருவாக்கிய இவர் புவிசார் தொழினுட்ப விஞ்ஞானி என்ற அடிப்படையில் உலகின் புகழ்பூத்த பல்கலைக்கழகங்களால் கௌரவிக்கப்பட்டார். வோட்டலூ பல்கலைக்கழகம் மற்றும் கொலம்பியாப் பல்கலைக்கழகம் முதலியவற்றில் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றினார். உலகளாவிய துறைசார் மாநாடுகளிலும் ஆய்வரங்குகளிலும் தன் புலமைச்சிறப்பினை நிலைநாட்டியிருந்தார். இவற்றின் மூலம் "Geotechnical Engineering" என்ற தன் துறையின் வளர்ச்சிக்கு புலமையாளனாகப் பணியாற்றினார்.

பேராசிரியர அவர்கள் நிர்வாக முகாமைத்துவத்திலும் திறன்கொண்டிருந்தார். பொறியியல் பேராசிரியர் ஒருவர் உயர்கல்வித்துறை சார்ந்த நிர்வாகியாக பரிணமித்தமை மிக முக்கியமானது. பேராதனைப்

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு இரண்டு தடவைகள் பீடாதிபதியாகவிருந்தார். 1985 ஆம் ஆண்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்குச் சென்று 1987 ஆம் ஆண்டில் அதன் பொறியியல் தொழிநுட்ப பீடத்திற்குப் பீடாதிபதியானார். பின்னர். 1988 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். இவரது காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இக்கட்டமான சூழலிலும் பல முக்கியமான மேம்பாடுகளைக் கண்டது. ஆறு வருடங்கள் துணைவேந்தராக பணியாற்றியபோது மாணவர்களுக்கு உதவும் வகையில் துணைவேந்தர் நிதியத்தினை தொடக்கி வைத்தார். ஆய்வுகளை ஊக்குவிக்கும் வகையில் ஆய்வாளர்களுக்கான நிதியங்களை உருவாக்கினார். இராமநாதன் நுண்கலைப் பிரிவினையும் விவசாய பீடத்தினையும் மேம்படுத்தியதோடு தொழிலாளர் கற்கை நெறியினையும் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகினையும் விருத்தி செய்வதற்கு துணையாகவிருந்தார். இன்று உருவாக்கப்பட்டுள்ள பொறியியல் பீடத்திற்கான அடிப்படைகள் அவர் காலத்திலேதான் உருவாக்கப்பட்டன.

புலமையாளனாகவும், உயர்கல்வி சார்ந்த நிர்வாகியாகவும் விளங்கிய பேராசிரியர் அவர்களின் சிறப்பு வாய்ந்த பணிகளில் இன்னொன்றாக சமூக மேம்பாட்டுப் பணிகளும் அமைந்தன. புறமொதுக்கப்பட்டவர்கள், நலிந்த சமுதாயப் பிரிவினர்களின் அபிவிருத்திக்கான பணியினை ஆற்றுவதற்காக அரச சார்பற்ற நிறுவனமான 'ஊற்று' நிறுவனத்தின் தலைவராகவிருந்து பணிபுரிந்தார். பேராசியர் "Soil Engineer" ஆக மாத்திரமன்றி "Social Engineer" ஆகவும் விளங்கியிருந்தார் என ஒரு பேராசிரியர் குறிப்பிட்டு இருக்கிறார்.

தமிழ் மக்களில் அதியுயர் கல்வி புலமையாளர்கள் சமூகத்தில் கீழ் நிலையில் இருக்கின்ற மக்களின் நலன்களில் அக்கறை கொள்வது குறைவாக இருந்து வந்த காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் உரிமை போராட்டத்துக்கான சேவையாளன் என்ற வகையில் பல

